புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# "எவையெல்லாம் தொழிற்பெயர்கள்?"

*திருமதி கு. ரெ. மஞ்சுளா,*
*2-10/1, இரவீந்திரநாத் தாகூர் தெரு,*
*கூடல் நகர், மதுரை - 625 018*

*ஆய்வுச்சுருக்கம்:*

*நம் மொழியில் தொழிற்பெயர்கள் ஆற்றும் பங்கு மிகுதியானது. ஆம்! பழங்காலந்தொட்டு, இன்று வரை நம் இலக்கியத்திலும் சரி, வாய்மொழியிலும் சரி, நாம் பயன்படுத்தும் மொத்தச் சொற்களில், தொழிற்பெயர்ச் சொற்களை மட்டும் கணக்கெடுத்துப் பார்த்தால் அவை கண்டிப்பாக இருபது விழுக்காட்டிற்கும் மேற்பட்டவையாக இருக்கும். இன்று நம்மிடையே புழக்கத்தில் இருக்கும் பல சொற்கள் ஊர்ப்பெயர்கள், சினைப்பெயர்கள், பண்புப்பெயர்கள், இடப்பெயர்கள் உட்பட பல தொழிற்பெயர்களாகவே வலம் வந்து கொண்டிருப்பதையும் காணலாம்.*

*கலைச்சொல்லாக்கத்திலும் நாம் தொழிற்பெயர் விகுதிகள் கொண்டே புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கி வருகிறோம்.. ஆதலின், தொழிற்பெயர் குறித்தும் அதன் வகை குறித்தும் அவற்றின் விகுதிகள் குறித்தும் விளக்கி, விகுதிகளின் அடிப்படையில் நம் பயன்பாட்டில் இருக்கும் சொற்களில் எவையெல்லாம் தொழிற்பெயர்கள் என்பதைச் சுட்டி உணர்த்துகிறது "எவையெல்லாம் தொழிற்பெயர்கள்" என்னும் இவ்வாய்வுக்கட்டுரை.*

*நம் பழந்தமிழ் இலக்கணப் பனுவலான தொல்காப்பியத்தின் வழி நூலான நன்னூலில் ஓதப்பட்ட தொழிற்பெயர்க்குரிய அமைதியிலக்கணத்தை ஆய்ந்து, அத்தொழிற்பெயர் விகுதிகளைத் தொகுத்து, அவ்விகுதிகள் வேர்ச்சொற்களோடு ஒத்தும் உறழ்ந்தும் மிக்கும் திரிந்தும் எவ்வாறு தொழிற்பெயர்களாகக் கிளவியாக்கம் பெறுகின்றன என்பதையும், அவ்வாறு ஆக்கம் பெற்ற தொழிற்பெயர்கள் தம் தொழிற்பெயர்ப் பயனோடு நில்லாது, தொழிலாகு பெயர்களாக விரிவு பெற்று, உலகில் பரவலாகப் பயன்பாட்டில் இருக்கும் பல்வேறு பொருள்களைக் குறிப்பதற்கு ஆகுவனவாகி எவ்வாறு ஆகுபெயர்களாகத் தோற்றம் பெற்றன என்பதை நிறுவுவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.*

*எவையெல்லாம் தொழிற்பெயர்கள்?*

*முகவுரை:*

*"மயக்கமா கலக்கமா? வாழ்க்கையில் நடுக்கமா?" .....*

*வாழ்க்கையின் மெய்மையை உணர்த்தும் இப்பாடலை அனைவரும் கேட்டு மகிழ்ந்திருப்போம். இப்பாடலில் வரும் மயக்கம், கலக்கம், குழப்பம், வாழ்க்கை, நடுக்கம் ஆகிய சொற்களை நோக்குங்கள். இவை அனைத்தும் ஒரு வினை அல்லது தொழிலை உணர்த்துவனவாக உள்ளன. 'மயக்கம்' என்பதற்கு 'மயங்குதல்' என்பது பொருள். 'கலக்கம்' என்பதற்குக் 'கலங்குதல்' என்பது பொருள். 'நடுக்கம்' என்பதற்கு 'நடுங்குதல்' என்பதே பொருள். அவ்வாறே 'வாழ்க்கை' என்பதற்கும் 'வாழ்தல்' என்பதே பொருள்.*

*ஆக, மயக்கம், கலக்கம், நடுக்கம், வாழ்க்கை என்பனவும் தொழிற்பெயர்கள்தாம் என்ற செய்தி, நம்மில் பலருக்குத் தெரியாத ஒன்றாகும். இவ்வாறு நாம் இவை தொழிற்பெயர்கள் தாம் என அறியாமலேயே அன்றாடம் வாழை, புரட்சி, வெற்றி, சாவி, மூளை, ஆலை, ஆவி, போர்வை எனப் பல தொழிற்பெயர்ச்சொற்களைப் பரவலாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.*

அவற்றை எடுத்தோதி அவை எவ்வாறு தொழிற்பெயர்களுக்குள் அடங்கும் என்பதை விளக்கியுரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆய்வு நெறிமுறைகள்:

இக்கட்டுரை தொழிற்பெயர்கள் என்றால் என்ன? என்பது பற்றியும் தொழிற்பெயருக்குண்டான விகுதிகள் எவை? என்பது பற்றியும் தொழிற்பெயர்கள் தொழிலாகு பெயர்களாக எவ்வாறு ஆக்கம் பெற்று இன்று நம்மிடையே புழங்குகின்றன என்பது பற்றியும் விரித்துரைக்கின்றது.

தொழிற்பெயர்களை அவற்றை விகுதி ஏற்கும் தொழிற்பெயர், விகுதி ஏலாத் தொழிற்பெயர் என வகைப்படுத்தும் பொழுதும், தொழிற்பெயர்களை விகுதி வரிசையாகப் பகுக்கும் பொழுதும் பகுப்புமுறைத் திறனாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. அவற்றிற்கு விளக்கம் கொடுக்க முற்படுகையில் விளக்கமுறை ஆய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது.

தொழிற்பெயரும் அதன் வகைகளும்:

எவையெல்லாம் தொழிற்பெயர்கள்? என்பது குறித்த தெளிவான பார்வை கிடைத்தால் தான் தொழிற்பெயர் விகுதிகள் கொண்டு நம்மிடையே புழங்கும் தொழிற்பெயர்ச்சொற்களை இனங்காண முடியும். அதற்குப் பகுபத உறுப்பிலக்கணம் பற்றி அறிந்திருத்தல் அவசியம்.

பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே... (நன்னூல் 132)

பொருள் இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவை காரணமாக வரும் பெயர்ச்சொற்களும், தெரிநிலையாயும் குறிப்பாயும் காலத்தைப் பெறும் வினைச்சொற்களும் பகுபதங்கள் ஆகும். பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளுள் முடிவுக்கு ஏற்பவைகளை நினைத்து அறிவுடையோர் முடிக்க, எல்லா வகைப் பகுபதங்களும் முடியும். சான்றுகள்:

1. மகிழ்ந்தான் - மகிழ் + த்( ந்) + த் + ஆன்
   மகிழ் - பகுதி; த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடை நிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.
2. மகிழ்க - மகிழ் + க
   மகிழ் - பகுதி; க - வியங்கோள் வினைமுற்று விகுதி.
3. மகிழ்ச்சி - மகிழ் + ச் + சி
   மகிழ் - பகுதி, ச் - சந்தி: சி - தொழிற்பெயர் விகுதி.

இவ்வாறு பகுதி விகுதியாகப் பிரிக்கக் கூடிய சொற்களையே பகுபதச் சொற்கள் என்போம். அவற்றுள் தொழிற்பெயர் விகுதி கொண்டு முடியும் சொற்களையே 'விகுதி ஏற்கும் தொழிற்பெயர்ச் சொற்கள்' என்பர். விகுதி ஏற்காமல் வரும் தொழிற்பெயர்களும் உண்டு. அவற்றை விகுதியேலாத் தொழிற்பெயர் என்பர். ஆக தொழிற்பெயர்களை இரு வகையில் அடக்குவர். அவை:

1. விகுதி ஏலாத் தொழிற்பெயர் கள் - பசி, சண்டை, பட்டினி
2. விகுதி ஏற்கும் தொழிற்பெயர்கள் - பொழிதல், நகை, வாய்மை, வாழ்க்கை

தொழிற்பெயர்கள் உருவாகும் முறை:

ஒரு வினைச்சொல்லின் வேர்ச்சொல்லைக் கூறினால், அதனடியாகப் பிறக்கும் தொழிற்பெயரை, 'தல்' அல்லது 'அல்' என்பதைச் சேர்த்து, அமைத்துவிடல் முடியும். எடுத்துக்காட்டாக, 'விடு' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து விடுதல் (விடு+தல்), விடல் (விடு+அல்), ஆகிய தொழிற்பெயர்களை ஆக்கல் முடியும். இவ்வாறே, 'செய்' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து, செய்தல் (செய்+தல்), செயல் (செய்+அல்) ஆகிய தொழிற்பெயர்கள் பிறக்கும். இத்தொழிற்பெயர்கள் 'தல்' அல்லது 'அல்' என்னும் தொழிற்பெயர் விகுதிகளை மட்டும் இணைத்துச் செய்யப்பட்டவை. 'தல்' மற்றும் 'அல்' விகுதிகள் தவிர்த்துப் பிற தொழிற்பெயர் விகுதிகளும் தமிழில் உள.

*அஃதாவது, தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்னும் பல விகுதிகளைப் பெற்றும் தொழிற்பெயர்கள் வரும். (பார்க்க நன்னூல் 140). அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.*

*1. 'அம்' என்னும் தொழிற்பெயர் விகுதி :*

*'கூட்டம்' என்னும் சொல்லை நாம் அடிக்கடிப் பயன்படுத்துவோம். பொதுக்கூட்டம், செயற்குழுக்கூட்டம் போன்ற சொற்களில் 'கூட்டம்' என்னும் சொல் பயன்படுத்தப்படுவதை நோக்குக. இக் 'கூட்டம்' என்னும் சொல்லும் ஒரு தொழிற்பெயரே. 'கூடு' என்ற வினை (தொழில்) வேர்ச்சொல் 'அம்' என்னும் விகுதியுடன் இணைந்தே, கூடு+அம் = கூட்டம் என்னும் தொழிற்பெயராயிற்று.*

*அவை தவிர்த்து ஆட்டம் (ஆடு+அம்), குறுக்கம் (குறுகு+அம்), நீளம் (நீள்+அம்), அகலம் (அகல்+அம்), தாக்கம் (தாக்கு +அம்), ஆழம் (ஆழ் + அம்), ஒழுக்கம் (ஒழுகு +அம்), ஏப்பம் (ஏம்பு+அம்), வழக்கம் (வழங்கு+அம்) போன்ற சொற்களும் 'அம்' விகுதி கொண்ட தொழிற்பெயர்களே.*

*2. 'வி' என்னும் தொழிற்பெயர் விகுதி:*

*இன்று 'கல்வி' என்னும் சொல் நம்மிடையே பரவலாகப் புழக்கத்தில் உள்ளது. இக்கல்வி என்னும் சொல்லும் ஒரு தொழிற்பெயர்தான் என்றால் வியப்பாக இருக்கிறதா? 'கல்' என்னும் வேர்ச்சொல்லுடன் 'வி' என்னும் தொழிற்பெயர் விகுதி இணைந்து, 'கல்வி' என்னும் தொழிற்பெயர் உண்டாயிற்று. கல்+வி = கல்வி.*

*இது போன்று 'வி' என்னும் விகுதி கொண்ட, பிறவி (பிற+வி), கேள்வி (கேள்+வி), தோல்வி (தோல்+வி), வேள்வி (வேள்+வி), கலவி (கல+வி), திறவி (திற+வி) ஆகியனவும் தொழிற்பெயர்களே.*

*'ஆவி' என்ற சொல்லும் (ஆ+ வி) தொழிற்பெயரே. அஃதாவது, 'உயிருக்கு ஆதல்' என்னும் பொருளில், 'ஆ' என்னும் வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்ததே 'ஆவி' என்னும் 'வி' விகுதி கொண்ட தொழிற்பெயர்*

*இன்று நம்மிடையே 'சாவி' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது தமிழ்ச்சொல்லன்று. பிறமொழிச்சொல்லாகும். தமிழில் சாவி' எனில், சா+வி = சாவி என்று கொள்ளப்பட்டு, அதற்குச் 'சாவு' அல்லது 'இறப்பு' என்றே பொருள் வரும். எனவே, இந்தச் 'சாவி' என்னும் பிறமொழிச்சொல்லுக்கு மாற்றாக, நாம் 'திறவி' (திற+வி) என்னும் தொழிற்பெயரைப் பயன்படுத்தலாம்.*

.

*3. 'வு' என்னும் தொழிற்பெயர் விகுதி:*

*இறப்புவீட்டை 'இழவுவீடு' என்று சொல்லும் வழக்கம் நம்மிடையே உள்ளது. இந்த 'இழவு' என்னும் சொல்லும் ஒரு தொழிற்பெயரே. 'இழ' என்னும் வினை வேர்ச்சொல், 'வு' என்னும் விகுதியுடன் இணைந்து பிறந்ததே 'இழவு' என்னும் தொழிற்பெயராகும்.*

*இது போன்று 'வு' என்னும் விகுதி பெற்று வரும் தொழிற்பெயர்களைக் கீழ்க்காண்க: பிரிவு(பிரி+வு), சாவு(சா+வு), ஓய்வு(ஓய்+வு), முடிவு(முடி+வு), அறிவு(அறி+வு), அழிவு (அழி+வு), துறவு(துற+வு), துணிவு(துணி+வு), தீர்வு(தீர்+வு), கடவு(கட+வு), வாழ்வு(வாழ்+வு), சோர்வு(சோர்+வு).*

*4. 'ஐ' என்னும் தொழிற்பெயர் விகுதி:*

*கொலை, விலை, நிலை - இவை அனைத்தும் 'ஐ' என்னும் விகுதி கொண்ட தொழிற்பெயர்கள். கொல் +ஐ என்பதே 'கொலை' ஆனது; வில்+ஐ என்பது தான் 'விலை' ஆனது. இதைப் போன்றே, நில்+ஐ என்பதிலிருந்து 'நிலை' என்னும் தொழிற்பெயர் வந்தது.*

*வடமொழியாளர்கள் 'கலை' என்னும் இச்சொல் வடமொழியில் உள்ள 'கலா' என்ற சொல்லில் இருந்து ஏற்பட்டதாகக் கூறுவர். அது தவறாகும். 'கலை' என்பது தமிழில் ஏற்பட்ட ஓர் அழகிய தொழிற்பெயர். கல்+ஐ = கலை.*

இவ்வாறே, நகை (நகு+ஐ), பகை (பகு +ஐ), வகை (வகு +ஐ), தொகை (தொகு +ஐ), படை (படு +ஐ), விடை (விடு +ஐ), கொடை (கொடு +ஐ), பொறை (பொறு+ஐ), வாழை (வாழ்+ஐ), தாழை (தாழ்+ஐ), ஆலை (ஆல்+ஐ), மூளை(மூள்+ஐ) என்பனவும் 'ஐ' விகுதி கொண்ட தொழிற்பெயர்களே.

வாழ்தலுக்கு உதவுவதால் 'வாழை' ஆயிற்று. தாழ்வான மரம் என்பதால் 'தாழை' ஆயிற்று. 'ஆல்+ஐ' என்பதே 'ஆலை' ஆயிற்று. 'ஆல்' என்னும் வேர்ச்சொல்லுக்கு 'ஆடு' என்பது பொருள். ஆடிக் (இயங்கிக்)கொண்டிருப்பதால், 'ஆலை' என்ற தொழிலாகு பெயராக நம்மால் வழங்கி வருகிறது.

அதே போன்று, 'மூள் + ஐ' என்பதே 'மூளை' ஆயிற்று. 'மூள்' எனில் 'ஒருங்கிணைந்து சேர்' என்னும் பொருளைத் தரும். நம் நரம்பு மண்டலங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பகுதியையே நாம் 'மூளை' என்கிறோம்.

5. 'உள்' என்னும் தொழிற்பெயர் விகுதி :

'உள்' என்பதும் ஒரு தொழிற்பெயர் விகுதியே எனத் தமிழ் இலக்கணத்தில் கூறப்பட்டுள்ளது. 'ஆயுள்' என்பது தமிழ்ச்சொல்லே. அஃதாவது, 'ஆகி இருத்தல்' (உயிராகி இருத்தல்) எனும் பொருளில் 'ஆயுள்' என்ற சொல் ஆக்கம் பெற்றது. ஆ+உள் என்பதே 'ஆவுள்' என்றாகிப் பின், 'ஆயுள்' என்றாயிற்று. அஃதாவது, 'ஆ' என்ற வேர்ச்சொல் 'உள்' என்னும் விகுதியுடன் இணைந்து 'ஆயுள்' என்றாகியது. எனவே, 'ஆயுள்' என்பதும் தமிழ்ச்சொல்லே.

இது போன்றே, கடவுள், செய்யுள், உறையுள் என்ற சொற்களும் ஆக்கம் பெற்றன. இந்த 'உள்' விகுதி கொண்ட செய்யுள், கடவுள், ஆயுள், உறையுள் போன்ற தொழிற்பெயர்கள், இன்று நம்மால் ஆகுபெயராக வழங்கப்பட்டு வருகின்றன. 'செய்யுள்' என்பது பாட்டுக்கு ஆகித் தொழிலாகு பெயராகிவிட்டது. 'கடவுள்' என்பதும் அனைத்தையும் கடந்து நிற்கும் இறைவனுக்கு ஆகி, ஆகுபெயராயிற்று. இவ்வாறே ஆயுள், உறையுள் என்பனவும் ஆகுபெயராகின.

கட+உள் = கடவுள். (கடந்து நிற்றல்)
செய்+உள் = செய்யுள் (சொற்களால் செய்யப்படல்)
உறை+உள் = உறையுள் (தங்கியிருத்தல்)

6. 'வை' என்னும் தொழிற்பெயர் விகுதி:

இந்நாளில், அரசுக்கு நாம் கட்ட வேண்டிய வரியைத் 'தீர்வை' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறோம்.. அந்தத் 'தீர்வை' என்னும் சொல்லும் தொழிற்பெயர்தான். (தீர்+வை = 'தீர்வை)

'அரசுக்குரிய கடனைத் தீர்த்தல்' என்னும் பொருளில், இந்தத் 'தீர்வை' என்னும் சொல் வரிக்கு மாற்றாக, தொழிலாகுபெயராகி இன்று, நம்மால் வழங்கப்பட்டு வருகிறது. இது போன்று 'வை' விகுதி பெற்ற பிற தொழிற்பெயர்களைக் கீழ்க்காண்க.

- பார்வை (பார்+வை),
- சால்வை (சால்+வை) - சான்ற பண்புக்காகப் போர்த்தப்படும் ஆடைக்கு ஆகுபெயராயிற்று.
- கோவை ( கோ+வை) – கோக்கப்படுவது.
- பறவை (பற+வை) - பறத்தல் செயலைச் செய்வதால் பறவைக்குத் தொழிலாகுபெயராயிற்று.
- பரவை (பர+வை) - பரந்து இருப்பதால் கடலுக்கு ஆகி, தொழிலாகுபெயராக வழங்கி வருகிறது.
- மிதவை (மித+வை) – மிதத்தலால், அச்செயல் புரியும் படகுக்கு ஆகி, மிதவை தொழிலாகுபெயராயிற்று.

7. 'சி' என்னும் தொழிற்பெயர் விகுதி:

'மாட்சி' என்னும் சொல் போன்றே 'காட்சி' என்னும் சொல்லும் தமிழ்ச்சொல் ஆகும். எவ்வாறெனில், 'மாட்சி' எனனும் சொல் 'மாண்' (சிறத்தல்) என்கின்ற வினை வேர்ச்சொல்லில் இருந்து எவ்வாறு உண்டானதோ, (மாண் + சி = மாட்சி), அது போன்றே 'காண்+சி' என்பதே 'காட்சி' ஆயிற்று. அஃதாவது, 'காண்' என்கின்ற வினைச்சொல்லோடு, 'சி' என்கின்ற

தொழிற்பெயர் விகுதி சேர்ந்து காண்+சி = காட்சி ஆயிற்று. ‘புரட்சி’ என்கின்ற சொல்லும் இவ்வாறு தோன்றிய தொழிற்பெயரே. ஆம்! ‘புரள்’ என்னும் வினை வேர்ச்சொல்லில் இருந்து உருவானதே ‘புரட்சி’ (புரள்+சி) எனும் தொழிற்பெயர்.

இவ்வாறு ஆக்கம் பெற்ற தொழிற்பெயர்களே அவற்றுடன் தொடர்புடைய பொருட்களுக்கு ஆகிவந்து தொழிலாகு பெயர்களாக இன்று நம்மிடையே வழங்குகின்றன. காட்சி, புரட்சி, ஆட்சி போன்ற தொழிலாகுபெயர்கள் இதற்கு எடுத்துக்காட்டுக்கள் ஆவ. இவ்வாறு ‘சி’ என்ற விகுதி பெற்று வரும் தொழிற்பெயர்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| ஆள் + சி = ஆட்சி, | பயில் + சி = பயிற்சி, | முயல் + சி = முயற்சி, |
| உணர் + சி = உணர்ச்சி, | மகிழ் + சி = மகிழ்ச்சி, | தளர் + சி = தளர்ச்சி, |
| வளர் + சி = வளர்ச்சி, | திரள் + சி = திரட்சி, | வறள் + சி = வறட்சி. |
| மலர் + சி = மலர்ச்சி, | புணர் + சி = புணர்ச்சி, | தேர் + சி = தேர்ச்சி |
| வீழ் + சி = வீழ்ச்சி, | தாழ் + சி = தாழ்ச்சி, | புகழ் + சி = புகழ்ச்சி. |

8. ‘கை’ என்னும் தொழிற்பெயர் விகுதி:

இன்று நம்மால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ‘சோற்றுப்பருக்கை’ என்பதில் உள்ள ‘பருக்கை’ என்கின்ற சொல்லும் தொழிற்பெயரே. அஃதாவது, வேக வைக்கும் பொழுது அரிசி ‘பருத்தலால்’ அது பருக்கை என்றாகி, அதுவே தொழிலாகு பெயராயிற்று. அஃதாவது, பரு + கை என்பதுதான் ‘பருக்கை’ ஆயிற்று.

யாக்கை, உடுக்கை, படுக்கை, படுகை, கொள்கை, செய்கை, அழுகை, தொழுகை, வேட்கை, படர்க்கை என்பனவும் ‘கை’ என்னும் விகுதி பெற்றுப் பிறந்த தொழிற்பெயர்களே.

உடுக்கை(ஆடை) என்பது ‘உடுத்தல்’ என்னும் தொழிலின் அடியாகப் பிறந்த தொழிற்பெயர்ச்சொல். அஃதாவது, உடு + கை என்பது தான் ‘உடுக்கை’ ஆயிற்று.

படுக்கை என்பது ‘படுத்தல்’ என்னும் தொழிலின் அடியாகப் பிறந்த தொழிற்பெயர்ச்சொல். அஃதாவது, படு + கை என்பதுதான் ‘படுக்கை’ ஆயிற்று.

படுகை (ஆற்றுப்படுகை) என்பது ‘படுதல்’ என்னும் தொழிலின் அடியாகப் பிறந்த தொழிற்பெயர்ச்சொல். அஃதாவது, படு + கை என்பதுதான் ‘படுகை’ ஆயிற்று. 'கொள்கை' என்பது ‘கொள்ளுதல்’ என்னும் தொழிலின் அடியாகப் பிறந்த தொழிற்பெயர்ச்சொல். அஃதாவது, கொள் + கை என்பதுதான் ‘கொள்கை’ ஆயிற்று.

செய்கை - செய்+கை என்பதுதான் ‘செய்கை’ ஆயிற்று. அழுகை - அழு+கை என்பதுதான் ‘அழுகை’ ஆயிற்று. தொழுகை - தொழு+கை என்பதுதான் ‘தொழுகை’ ஆயிற்று.

அவ்வாறே, 'வேட்கை' என்னும் சொல்லும் வேள் (விரும்பு) என்னும் வினை வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்த தொழிற்பெயராகும். (வேள் + கை = வேட்கை).

அது போன்றே படர்க்கை என்னும் சொல், படர் என்னும் வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்த தொழிற்பெயராகும். படர்+கை = படர்க்கை.

9. ‘பு’ என்னும் தொழிற்பெயர் விகுதி:

அடுத்ததாக, இன்று நடுவு(நீதி) மன்றங்களில், புழங்கும் ‘தீர்ப்பு’ என்கின்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். வழக்கின் சிக்கலைத் தீர்ப்பது தான் தீர்ப்பு. இந்தத் ‘தீர்ப்பு’(தீர்+பு) எனும் சொல்லும் ‘பு’ விகுதி கொண்ட தொழிற்பெயர்ச்சொல்லே.

இது போன்றே, ‘வேட்பாளர்’ என்னும் சொற்றொடரில் வரும் ‘வேட்பு’ என்னும் சொல்லும் தூய தமிழ்த் தொழிற்பெயர்ச்சொல்லே. ‘வேட்பு’ என்பது ‘விருப்பு’ என்னும் பொருளைத் தருகிறது. ‘விருப்பத்துடன் போட்டியிடுபவர்’ என்ற பொருளில், வேள் (விரும்பு) + பு + ஆளர் = வேட்பாளர் என்றானது.

அடுப்பு, மூப்பு, இறுமாப்பு, அழிப்பு, இழிப்பு, அமைப்பு என்பனவும் ‘பு’ விகுதி கொண்ட தொழிற்பெயர்களாம்.

இவ்வாறு நடப்பு (நட+பு), காப்பு (கா+பு), கோப்பு (கோ+பு), விடுப்பு (விடு+பு), கடுப்பு (கடு+பு), தடுப்பு (தடு+பு), வெறுப்பு (வெறு+பு), சிரிப்பு (சிரி+பு), வார்ப்பு (வார்+பு), மறுப்பு (மறு+பு), வாய்ப்பு (வாய்+பு), ஏற்பு(ஏல்+பு), நோற்பு(நோல்+பு) என்று ‘பு’ விகுதி கொண்ட தொழிற்பெயர்கள் ஆக்கம் பெறும்.

*10. ‘தி’ என்னும் தொழிற்பெயர் விகுதி :*

*இன்று நம்மிடையே ‘அசதி’ என்னும் சொல் ‘களைப்பு’ என்னும் பொருளில் வழங்கி வருகிறது. இந்த ‘அசதி’ என்கின்ற சொல் எப்படி வந்தது? இந்த ‘அசதி’ என்னும் சொல் ‘அயர்தி’ என்கின்ற சொல்லின் திரிபே! ‘கண் அயர்ந்து விட்டது’ என்பதையே ‘கண் அசந்து விட்டது’ என்று திரித்துச் சொல்கிறோம். இதன் பிறவினைச் சொல்லாகிய ‘அசத்தி விட்டேன்’ என்பதற்கும் ‘அயர்த்தி விட்டேன்’ என்பதே பொருள்.*

*‘அயர்’ என்னும் வினைவேர்ச்சொல் ‘தி’ என்னும் தொழிற்பெயர் விகுதியுடன் இணைந்து, அயர் + தி = அயர்தி ஆகிப் பின் திரிந்து, ‘அசதி’ ஆகிவிட்டது. 'வெற்றி' என்பதும் ஒரு தொழிற்பெயர்தான்; 'வெல்+தி' என்பதே வெற்றி என்றாயிறறு.*

*இவை மட்டுமன்றி, நேர்த்தி, ஊர்தி என்பனவும் தொழிற்பெயர்களே. அஃதாவது, நேர்பட அமைந்திருப்பதால் ‘நேர்த்தி’ (நேர்+தி) எனவாயிற்று. இது போன்று, ஊர்ந்து செல்லும் வண்டி ஊர்தி (ஊர்+தி) ஆயிற்று. இவ்வகையில் 'தி' என்னும் விகுதி பெற்று வரும் பிற தொழிற்பெயர்கள் பின்வருமாறு:*

*தொகுதி(தொகு+தி), கெடுதி(கெடு+தி), மறதி(மற+தி), விடுதி(விடு+தி), செய்தி(செய்+தி), உறுதி(உறு+தி), இறுதி(இறு+தி), அமைதி(அமை+தி)*

*11. ‘மானம்’ என்னும் தொழிற்பெயர் விகுதி:*

*'மானம்' என்னும் தொழிற்பெயர் விகுதி பெற்றும் பல தொழிற்பெயர்கள் ஆக்கம் பெற்றுள்ளன. வருமானம், அடைமானம், வாழ்த்துமானம், தேய்மானம், சாய்மானம், பிடிமானம், கட்டுமானம், தீர்மானம், பகுமானம் போன்றவை ‘மானம்’ என்ற விகுதி கொண்ட தொழிற்பெயர்கள் ஆகும். இவற்றுள் ‘வாழ்த்துமானம்’ என்பது தென்தமிழகப் பகுதிகளில் பேசப்படும் வட்டார வழக்காகும். ‘வசை’ என்னும் பொருளில் இந்த ‘வாழ்த்துமானம்’ என்கின்ற சொல் எள்ளி நகையாடும் பொருளில் வழங்கப்பட்டு வருகிறது.*

*12. ‘கு’ விகுதி: போக்கு (போ+கு), தடுக்கு (தடு+கு).*

*13. ‘மை’ விகுதி: வாய்மை, பொய்மை, பொறுமை, நல்காமை, அஞ்சாமை.*

*14. ‘பாடு’ விகுதி: கூப்பாடு (கூ+பாடு), கடப்பாடு (கட+பாடு), இழுபாடு (இழு+பாடு), கோட்பாடு (கொள்+பாடு). இங்குக் ‘கொள்’ என்பது தன் முதனிலை திரிந்து, ‘கோள்’ என்றாகியது.*

*15. ‘காடு’ விகுதி: சாக்காடு (சா+காடு). விழுக்காடு (விழு+காடு).*

*16. ‘அரவு’ விகுதி: தோற்றரவு, தேற்றரவு, ஒப்பரவு.*

*17. ‘து’ விகுதி: வரத்து (வா என்னும் வினைச் சொல்லிலிருந்து பிறந்தது)*

*‘பொய்புரட்டு’ என்பதில் உள்ள ‘புரட்டு’ என்னும் சொல்லை எடுத்துக் கொள்வோம். இதுவும் ‘து’ என்னும் தொழிற்பெயர் விகுதி கொண்டதே. அஃதாவது, புரள்+து என்பதே ‘புரட்டு’ என்றானது. அதே போன்று, ‘இருட்டு’ என்பதுவும் இருள் என்னும் வினைவேர்ச்சொல்லுடன் து என்னும் விகுதி சேர, ‘இருள்+து’ = இருட்டு என்றானது.*

*முடிவுரை:*

*"பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வகையினானே" என்னும் கூற்றிற்கேற்ப மேற்கண்ட தொழிற்பெயர் விகுதிகள் தவிர, பிற விகுதிகள் கொண்டும் இன்று நாம் பல தொழிற்பெயர்ச்சொற்களைப் பரவலாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.*

*‘மதி’ என்னும் விகுதி கொண்டும் இன்று பல தொழிற்பெயர்கள் வழங்குகின்றன. சான்றாக, ஏற்றுமதி, இறக்குமதி, பெறுமதி போன்ற சொற்கள் இவ்வகையில் தோன்றியவையே.*

*‘சல்’ என்னும் விகுதி கொண்டும் இன்று பல தொழிற்பெயர்கள் இலங்குகின்றன. விரிசல், நெரிசல், கரிசல், குலைச்சல், பாய்ச்சல், மேய்ச்சல், குடைச்சல், அலைச்சல், காய்ச்சல் முதலிய சொற்கள் ‘சல்’ என்னும் விகுதி கொண்டு தோன்றியவையே.*

*இவை போன்றே பொரியல், அவியல், வறுவல், துவையல், சீவல் என வழங்கும் பெயர்களும், கக்கல், கலக்கல், குமட்டல், கேட்டல், தூவல், துருவல் என வரும் சொற்களும் தொழிலை அடியாகக் கொண்டு, ‘அல்’ என்னும் விகுதி கொண்டு பிறந்த தொழிற்பெயர்களே. இன்று பரவலாகப் புழக்கத்தில் இருக்கும் ஊழல் (ஊழ் + அல்), காவல் (கா + அல்) என்னும் சொற்களும் ‘அல்’ ஈற்றுத் தொழிற்பெயர்களே. (ஊழ் என்னும் வினைச் சொல்லுக்குத் தன்மைகெடல், பதனழிதல் என்பதே பொருள்.)*

*இவ்வாறாக, தொழிற்பெயர் நம் தமிழ்மொழியின் சொல்லமைப்பில் சிறப்பிடம் வகிக்கிறது. மேலும், நம்மால் இந்தத் தொழிற்பெயர் விகுதிகளுள் ஏதேனும் ஒன்றை இணைத்துப் பல புதுமையான சொல்லாக்கங்களை வார்த்தலும் முடியும்.*

*சான்றாக, இப்பொழுது 'இலவசம்' என்னும் பிறமொழிச்சொல்லை நம் தமிழ்ச்சொல் போன்று வெகு இயல்பாகப் பயன்படுத்தி வருகிறோம். இந்த 'இலவசம்' என்னும் சொல்லுக்கு மாற்றாகக் 'அளியம்' (அளி + அம்) என்னும் தூய தமிழ்ச்சொல்லை, 'அம்' என்னும் தொழிற்பெயர் விகுதி கொண்டு உருவாக்கிப் பயன்படுத்தலாமன்றோ?*

*ஆதலின், கலைச் சொல்லாக்க உருவாக்கத்தின் பொழுது, தொழிற்பெயர் விகுதி பயன்பாடு கொண்டு, புதிய கலைச் சொற்களை நாளும் உருவாக்கித் தமிழ் மொழியை வளர்த்தெடுப்போம்.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********